செய்திப் பணிப்பாளர் /செய்திஆசிரியர் 24.02.2020

# செய்தி வெளியீடு

## தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(அடிப்படை 2013=100) : ஜனவரி 2020


**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்**

**பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு**

தொலைபேசி: 011-2147414 தொலைநகல்: 011-2877945 மின்னஞ்சல் prices@statistics.gov.lk


2020 சனவரி மாதத்திற்கான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(தே.நு.வி.சு.) பற்றிய அறிக்கையை வெளியிடுகையில் தொகைமதிப்பு, புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகம், தே.நு.வி.சு. அடிப்படையான வருடத்தின் மீது வருட மாற்றத்தினால் (கடந்த வருடத்தின் அதே மாத தே.நு.வி.சு. மீது நடப்பு மாத தே.நு.வி.சு. இல் சதவீத மாற்றம்) அளவிடப்பட்டவாறு முதன்மைப் பணவீக்கமானது 7.6% ஆக கணக்கிடப்பட்டுள்ளது என தெரிவித்தார். 2019 திசெம்பர் மாதம் பொருட்டு பதிவாகிய முதன்மைப் பணவீக்கம் 6.2% ஆக இருந்தது. 2020 சனவரி மாதத்தில் உணவு மற்றும் உணவல்லாப் பிரிவுகளிலிருந்து பணவீக்க வீதத்திற்கான பங்களிப்புகள் முறையே 6.0%, 1.7% ஆக காணப்படுகின்றன. அதேவேளை, 1.2% முதன்மைப் பணவீக்கத்தின் பெறுபேறாக 2019 சனவரி மாதத்தில் பணவீக்கத்திற்கான உணவு மற்றும் உணவல்லாப் பிரிவுகளிலிருந்தான பங்களிப்புகள் முறையே -2.2%, 3.5% ஆக காணப்பட்டன. 2019 சனவரி மாதத்துடன் ஒப்பிடுகையில், உணவுப் பிரிவில் அதிகரித்த சதவீதம் பதிவாகியமைக்கான பிரதான காரணம், 2020 சனவரி மாதத்தில் நிலவிய உயர்வான விலை மட்டங்களே குறிப்பாக மரக்கறி, அரிசி, சின்ன வெங்காயம், புதிய மீன், பால் மா மற்றும் பெரிய வெங்காயம் ஆகியவற்றின் அதிகரித்த விலைகளாகும்.

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(தே.நு.வி.சு.) மாதம் மீது மாத மாற்றங்களை ஒப்பிடுகையில் 2019 திசெம்பர் மாதத்தில் பதிவாகிய 135.0 இருந்து 2020 சனவரி மாதத்தில் 137.0 ஆக அதிகரித்துள்ளது. இது, 2019 திசெம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில், 2.0 சுட்டெண் புள்ளிகள் அல்லது 1.5 சதவீத அதிகரிப்பொன்றைக் காட்டுகிறது. இந்த மாதம் மீது மாத மாற்றத்திற்கான காரணம், உணவுப்பொருட்களின் சுட்டெண் பெறுமதிகள் 1.14%இனாலும் உணவல்லாப்பொருட்களின் சுட்டெண் பெறுமதிகள் 0.36% இனாலும் அதிகரித்தமையேயாகும்.

உணவுப்பொருட்களின் அதிகரித்த விலைகள் மரக்கறி, தேங்காய், சின்ன வெங்காயம், புதிய மீன், தேங்காய் எண்ணெய், பப்பாசிப்பழம், மிளகாய்த்தூள், பச்சை மிளகாய், மைசூர் பருப்பு, மரவள்ளி மற்றும் மாம்பழம் என்பன பொருட்டு பதிவாகின. எனினும், உணவுப்பொருட்களின் குறைந்த விலைகள் பெரிய வெங்காயம், எலுமிச்சம்பழம், உருளைக்கிழங்கு, அரிசி மற்றும் பால் மா என்பன பொருட்டு பதிவாகின.

முந்திய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2020 சனவரி மாதத்தில் உணவல்லாப்பொருட்களின் சுட்டெண் பெறுமதிகளின் அதிகரிப்புக்கு காரணம், ‘வீடமைப்பு, நீர், மின்வலு, எரிவாயு ஏனைய எரிபொருள்கள்’(வீட்டு வாடகை), ‘கல்வி’ (ரியுஷன் கட்டணங்கள்), ‘அற்ககோல் பானங்கள், புகையிலை மற்றும் தியக்கமருந்துகள்’(வெற்றிலை), ‘நானாவிதப் பொருட்களும் சேவைகளும்’, ‘உணவகமும் ஹோட்டல்களும்’, ‘சுகாதாரம்’ (தனியார் மருத்துவ சேவைகளுக்கான கட்டணங்கள்)(0.01%), ‘பொழுதுபோக்கும் கலாசாரமும்’ அத்துடன் ‘ஆடையும் காலணியும்’ ஆகிய பிரிவுகளில் ஏற்பட்ட விலை அதிகரிப்புக்களாகும். மேலும், ‘தளபாடம், குடித்தன உபகரணம் மற்றும் வழமையான குடித்தன பராமரிப்பு’ பிரிவில் சற்று விலை அதிகரிப்பு பதிவாகியது. எனினும், முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில், ‘போக்குவரத்து’ பிரிவு பொருட்டு ஓரளவு குறைந்த விலை பதிவாகியது. அதேநேரம், ‘தொடர்பாடல்’ பிரிவின் விலைச் சுட்டெண் இம்மாதத்தில் மாற்றமின்றி காணப்பட்டது.

2020 சனவரி மாதத்திற்கான தே.நு.வி.சு. அடிப்படையான வருடத்தின் மீது வருட மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறு பொருளாதாரத்தில் தளம்பலுறும் உணவு, வலு மற்றும் போக்குவரத்து

போன்றன தவிர்ந்த மூலாதார பணவீக்கத்தை பிரதிபலிக்கும் மையப் பணவீக்கமானது, 2019 திசெம்பர் மாதத்தில் பதிவாகிய 5.2% இருந்து 3.9% வரை குறைவடைந்துள்ளது.




## தே.நு.வி.சு. இன் அசைவுகள் (அடிப்படை : 2013 = 100)

| வருடம் | மாதம் | சுட்டெண் | | சுட்டெண்ணிற்கான மாதத்திற்கு மாதம் % மாற்றம் | | வருடத்தின் மீது வருட பணவீக்க% | |
|---|---|---|---|---|---|---|---|
| | | தே.நு.வி.சு | தே.நு.வி.சு (மையம்) | தே.நு.வி.சு | தே.நு.வி.சு (மையம்) | தே.நு.வி.சு | தே.நு.வி.சு (மையம்) |
| **2019** | ஜனவரி | 127.3 | 130.2 | 0.2 | 2.0 | 1.2 | 5.1 |
| | பெப்ரவரி | 126.7 | 131.3 | -0.5 | 0.8 | 2.4 | 5.5 |
| | மார்ச் | 126.4 | 131.8 | -0.2 | 0.4 | 2.9 | 5.8 |
| | ஏப்ரல் | 127.3 | 132.6 | 0.7 | 0.6 | 3.6 | 6.3 |
| | மே | 128.7 | 133.0 | 1.1 | 0.3 | 3.5 | 6.3 |
| | யூன் | 129.2 | 133.0 | 0.4 | 0.0 | 2.1 | 6.1 |
| | யூலை | 129.4 | 133.4 | 0.2 | 0.3 | 2.2 | 6.1 |
| | ஓகஸ்ட் | 129.7 | 133.7 | 0.2 | 0.2 | 3.4 | 5.9 |
| | செப்ரெம்பர் | 130.6 | 134.0 | 0.7 | 0.2 | 5.0 | 5.6 |
| | ஒக்ரோபர் | 131.9 | 134.4 | 1.0 | 0.3 | 5.6 | 5.6 |
| | நவம்பர் | 132.9 | 134.6 | 0.8 | 0.1 | 4.1 | 5.5 |
| | டிசம்பர் | 135.0 | 134.2 | 1.6 | -0.3 | 6.2 | 5.2 |
| **2020** | ஜனவரி | 137.0 | 135.3 | 1.5 | 0.8 | 7.6 | 3.9 |

தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்